# பிற்சேர்க்கை - 2

# இடர் வெளிப்படுத்துதல் ஆவணம் (Risk Disclosure Document)

இந்த ஆவணத்தில் விளக்கப்பட்டிருக்கும் இடர்கள் முழுமையானவை என்றோ அல்லது போதுமான விளக்கங்கள் என்றோ அல்லது துல்லியமானவை என்றோ எக்ஸ்சேஞ்சுகள் வெளிப்படையாகவோ அல்லது உள்ளர்த்தம் கொண்டோ தெரிவிக்கவில்லை மற்றும் எக்ஸ்சேஞ்சானது சரக்கு டிரைவேட்டிவ்கள் (Commodity derivatives) சந்தை/வர்த்தகத்தில் பங்கேற்பதால் அனுகூலங்களை கூறுவதாகவோ அல்லது அதற்கு ஆதரவு அளிப்பதாகவோ எடுத்துக்கொள்ளக் கூடாது. வர்த்தகத்திலிருக்கும் அனைத்து இடர்களையும் வேறு கனிசமான வர்த்தக செயல்விளைவுகளையும் இந்த சுருக்கமான அறிக்கை முழுமையாக வெளிப்படுத்த வில்லை. ஆகவே, ஈடுபடுவதற்கு முன்பாக நீங்கள் டிரைவேட்டிவ்ஸ் வர்த்தகத்தை கவனமாக படிக்க வேண்டும்.

இடர்கள் நிறைந்திருக்கும் காரணத்தால், நீங்கள் மேற்கொள்ளவிருக்கும் உறவு முறையின் இயல்பு மற்றும் நீங்கள் எதிர்கொள்ளவிருக்கும் அபாய அளவுகளைப் புரிந்துகொண்ட பிறகே நீங்கள் பரிவர்த்தனைகளை மேற்கொள்ள வேண்டும்.

கமாடிட்டி எக்ஸ்சேஞ்ச் (எக்ஸ்சேஞ்சுகளில்) (Commodity exchange(s)) நடத்தப்படும் மூலதனப் பங்குகள், டிரைவேடிவ்ஸ் ஒப்பந்தங்கள் அல்லது இதர பிற ஆவணங்கள் சார்ந்த வர்த்தகங்களில் பல அளவுகளைக் கொண்ட இடர்கள் நிறைந்திருக்கின்றன என்பதையும், குறைந்த வளங்கள் / முதலீடுகள் செய்வதில் மற்றும்/அல்லது பங்கு வர்த்தகங்களில் ஈடுபடுவதில் மற்றும் அதிக அல்லது குறைந்த இடர் தாங்குதிறன் கொண்டவர்களுக்கு இது ஏற்ற இடம் இல்லை என்ற பொதுவான எச்சரிக்கையை நீங்கள் கட்டாயம் தெளிவாகப் புரிந்து கொண்டிருக்க வேண்டும். ஆகையால் உங்கள் நிதி நிலைமையைக் கருதி இது போன்ற வர்த்தக நடவடிக்கைகள் உங்களுக்கு ஏற்றது தானா என்பதை கவனமாகச் சிந்தித்த பிறகே பங்கு வர்த்தகங்களில் ஈடுபட வேண்டும். எக்ஸ்சேஞ்சு வர்த்தகங்களில் ஈடுபட்டு ஒருவேளை நீங்கள் பாதகமான விளைவுகள் அல்லது இழப்புகளை எதிர்கொள்ள வேண்டியிருந்தால் நீங்கள் மட்டுமே அதற்குப் பொறுப்பேற்க வேண்டியிருக்குமே அல்லாது எக்ஸ்சேஞ்சுகள் எவ்வகையிலும் அதற்குப் பொறுப்பாக முடியாது என்பதும், இடர்களை போதுமான விளக்கத்துடன் எனக்குத் தெரியப்படுத்தவில்லை என்றோ அல்லது நான் புரிந்துகொள்ளும் விதத்தில் எனக்கு முழுமையாக விளக்கப்படவில்லை என்றோ சம்பந்தப்பட்ட உறுப்பினரை(members/stock brokers) நீங்கள் குற்றம் கூற முடியாது என்பதையும் நீங்கள் புரிந்து செயல்பட வேண்டும். இதன் காரணமாக எந்த ஒப்பந்தத்தையும் மாற்ற அல்லது செயல்படாமல் தடுக்க முடியாது என்பதால் வாடிக்கையாளராகப் போகும்(client / investor) நீங்கள் மட்டுமே இதற்குப் பொறுப்பேற்க வேண்டும்.

ஒரு டிரைவேடிவ்ஸ் ஒப்பந்தத்தை எக்ஸ்சேஞ்சுகளில் வாங்கும் போது மற்றும் / அல்லது விற்கும் போது இலாபத்திற்கு அல்லது நஷ்டமடையாமல் தப்பிப்பதற்கு எந்த உத்தரவாதமும் இல்லை என்பதை நீங்கள் நன்றாகப் புரிந்துகொண்டு அந்த நிலையை ஏற்றுக்கொள்ள தயாராக இருக்க வேண்டும்.

ஒரு உறுப்பினர் (Members/ Stock Brokers) மூலமாக எக்ஸ்சேஞ்சுகள் வர்த்தகங்களில் நீங்கள் ஈடுபடுவதற்கு முன்னர் உறுப்பினர் விதிக்கும் சில இசைவு நடவடிக்கைகளுக்கு உடன்பட வேண்டும், அதுபோன்ற நடவடிக்கைகளில், உங்கள் வாடிக்கையாளரைத் தெரிந்துகொள்ளுங்கள் படிவத்தை நிரப்ப வேண்டும் போன்றவற்றையும் நீங்கள் தெளிவாகத் தெரிந்துகொள்ள வேண்டும், மற்றும் விதிமுறைகள், துணைவிதிகள் மற்றும் SEBI பரிந்துரைத்த எக்ஸ்சேஞ்சின் தொழில்விதிகள் மற்றும் எக்ஸ்சேஞ்சுகளால் அவ்வப்போது வெளியிடப்படுகின்ற சுற்றறிக்கைகள் ஆகியவற்றுக்கும் உட்பட வேண்டும்.

எக்ஸ்சேஞ்சுகள் ஆலோசனை வழங்குவதோ அல்லது ஆலோசனை வழங்கச் சொல்வதோ கிடையாது மற்றும் எக்ஸ்சேஞ்சுடன் தொடர்புடைய ஒரு உறுப்பினர் மற்றும்/அல்லது மூன்றாம் நபருடன் இந்த ஆவணத்தில் கொடுக்கப்பட்டிருக்கும் எந்த ஒரு தகவல் அடிப்படையிலாவது வர்த்தக உறவுமுறையில் ஈடுபடும் எந்த நபருக்கும் அது பொறுப்பாகாது.. இந்த ஆவணத்திலிருக்கும் விபரங்களை ஒரு வர்த்தக ஆலோசனையாக/ முதலீட்டு ஆலோசனையாக ஒருபோதும் புரிந்துகொள்ளக் கூடாது. ஒரு வர்த்தகத்திலிருக்கும் இடர்களை முழுமையாகப் புரிந்து அவற்றைச் சீர்தூக்கிப் பார்க்காமல் அவற்றில் நீங்கள் ஈடுபடக் கூடாது, உங்களுக்குத் தெளிவாகவில்லை என்றால், அவற்றைக் குறித்து தொழில்முறையாளர்களின் ஆலோசனைகளைக் பெற்றுக்கொள்ள வேண்டும்.

நீங்கள் வர்த்தகத்தில் ஈடுபடுவதா என்று கருதும் போது, கீழே கொடுக்கப்பட்டிருப்பவை உங்களுக்குத் தெரிந்திருக்க வேண்டும்:

## 1. கமாடிட்டி ஃப்யூச்சர்ஸ் ஒப்பந்தங்கள் மற்றும் மற்ற கமாடிட்டி டிரைவேடிவ்ஸ் சாதனங்களில் வர்த்தகம் செய்வதில் உள்ளடங்கியுள்ள அடிப்படை இடர்கள்.

### i. மிக அதிக விலைமாற்ற இடர்

கமாடிட்டி எக்ஸ்சேஞ்சுகளில் நடக்கும் வர்த்தகங்களில் டிரைவேடிவ்ஸ் ஒப்பந்த விலைகள் நிலையில்லாமல் மிக அதிக ஏற்ற இறக்கங்களுக்கு உட்பட்டுக் கொண்டிருக்கும். கமாடிட்டி டிரைவேடிவ்ஸ் ஒப்பந்த விலை எந்த அளவிற்கு மாற்றமடைகிறதோ அதே அளவில் விலைகளில் ஏற்ற இறக்கமும் பொதுவாக மாறுபடும். தீவிர வியாபாரம் நடக்கும் டிரைவேடிவ்ஸ்/ ஒப்பந்தங்களில் ஏற்படும் விலை மாற்றங்களுடன் ஒப்பிடும் போது வழக்கமாக, மிகக் குறைந்த அளவில் வியாபாரம் நடக்கும் டிரைவேடிவ்ஸ்/ ஒப்பந்தங்களில் விலை மாற்றங்கள் அதிகமாக இருக்கும். இது போன்ற விலை மாற்ற ஏற்ற இறக்கத்தால் நீங்கள் செய்திருக்கும் ஆர்டர்கள் பகுதி அளவில் நிறைவேற்றப்படலாம் அல்லது நிறைவேறாமலும் இருந்துவிடலாம், அல்லது நீங்கள் ஆர்டர் செய்து நிறைவேற்றப்பட்ட விலை அதன் பிறகு கடைசியாக நடந்த வியாபார விலையிலிருந்து கனிசமாக மாறுபட்டிருக்கலாம், அதாவது உண்மையான நஷ்டம் ஏற்படும்.

## ii. குறைந்த லிக்விடிட்டி இடர்:

a. சந்தையில் பங்கேற்றிருக்கும் வாடிக்கையாளர்கள் குறைந்த விலை வித்தியாசத்துடன் போட்டி விலையில் விரைவாக கமாடிட்டி டிரைவேடிவ்ஸ் ஒப்பந்தங்களை வாங்கி மற்றும் /அல்லது விற்க முடிவதை லிக்விடிட்டி (பணமாகும் ஆற்றல்) என்று குறிப்பிடப்படுகிறது. அதாவது, சந்தையில் நிறைய ஆர்டர்கள் கிடைக்கும் போது லிக்விடிட்டி அதிகரித்திருக்கும். லிக்விடிட்டி முக்கியம் வாய்ந்தது ஏனென்றால், லிக்விடிட்டி அதிகமிருக்கும் போது குறைந்த விலைவித்தியாசத்தில் முதலீட்டாளர்கள் பங்குகளை/ டிரைவேடிவ்ஸ் ஒப்பந்தங்களை வாங்கவும் விற்கவும் விரும்புவார்கள் அதனால் கமாடிட்டி டிரைவேடிவ்ஸ் ஒப்பந்தங்களை குறைந்த விலை வித்தியாசத்தில் விற்றும் வாங்கியும் அதற்குண்டான தொகையையும் எளிதாகப் பெற முடியும் / கொடுக்க முடியும். தீவிரமாக வாங்கி விற்கப்படும் கமாடிட்டி டிரைவேடிவ்ஸ் ஒப்பந்தங்களுடன் ஒப்பிடும் போது குறைந்த சில கமாடிட்டி டிரைவேடிவ்ஸ் ஒப்பந்தங்களில் குறைந்த லிக்விடிட்டி இருக்கும் அபாயமும் உண்டு. இதன் காரணமாக உங்கள் ஆர்டர்களில் ஒரு பகுதி மட்டுமே நிறைவேற்றப்படலாம், அல்லது மிகப் பெரிய விலை வித்தியாசத்துடன் நிறைவேற்றப்பட்டிருக்கலாம் அல்லது நிறைவேற்றப்படாமலும் இருக்கலாம்.

b. குறிப்பிட்ட கமாடிட்டிகளை டெலிவரி கொடுக்க/வாங்க உத்தேசம் இல்லாம வாங்குதல்/விற்றல் ஆகியவை இழப்பை விளைவிக்கலாம், ஏனென்றால் அத்தகைய சூழ்நிலையில் கமாடிட்டி டிரைவேட்டிவ் ஒப்பந்தங்கள் எதிர்பார்க்கப்பட்ட விலை அளவுகளைவிட குறைந்த/அதிக விலைகளுக்கு சரிசெய்யப்படலாம், இதன் மூலம் அத்தகைய கமாடிட்டிகளை விநியோகிக்க /பெற்றுக்கொள்ள பிரச்சனை எதுவும் இருக்காது.

## iii. விரிந்த விலை மாறளவு இடர்

a. மிகச் சிறந்த வாங்கும் விலைக்கும் மிகச் சிறந்த விற்கும் விலைக்கும் இடைப்பட்ட வித்தியாசத்தை விலை மாறளவு என்கிறோம். அதாவது கமாடிட்டி டிரைவேடிவ்ஸ் ஒப்பந்தம் ஒன்றை வாங்கி உடனே விற்கும் போது அல்லது விற்ற உடனே வாங்கும் போது நிகழும் விலை வித்தியாசத்தைக் இது பிரதிபலிக்கிறது. மிகக் குறைந்த லிக்விடிட்டி உள்ள கமாடிட்டி டிரைவேடிவ்ஸ் ஒப்பந்தங்களில் குறைந்த லிக்விடிட்டி மற்றும் அதிக லிக்விடிட்டி நிலை இயல்பு விலை மாறளவைவிட அதிகம் அகன்றிருக்கும் வாய்ப்புகள் அதிகம் இருக்கும். இதனால் விலை மேம்படும் நிகழ்வு பாதிப்படையும்.

iv. **இடர்களைக் குறைக்கும் ஆர்டர்கள்:**

a. நஷ்டத்தை ஓரளவு தொகை வரை குறைக்கும் எண்ணத்துடன் ஆர்டர்கள் (உ.ம். “ஸ்டாப் லாஸ்” ஆர்டர்கள், அல்லது “லிமிட்” ஆர்டர்கள்) போடுவதற்கு முதலீட்டாளர்களுக்கு பெரும்பாலான எக்ஸ்சேஞ்சுகள் ஒரு வசதியைக் கொண்டு இருக்கின்றன, இவை பல நேரங்களில் பிரயோஜனமில்லாமல் போக நேரலாம், ஏனென்றால் சந்தை நிலவரத்தில் ஏற்படும் அதிக வேக மாற்றங்களில் இது போன்ற ஆர்டர்களை நிறைவேற்றுவது கடினமாகலாம்.

b. எதிர் தரப்பில் ஆர்டர்கள் தயாராகக் கிடைக்கும் போது “மார்கெட்” ஆர்டர்களாகப் போடப்பட்ட ஆர்டர்கள் விலைகளைப் பற்றி அலட்டிக் கொள்ளாமல் தாமதமில்லாமல் நிறைவேற்றப்படும் வாய்ப்புகள் அதிகம், வாடிக்கையாளர் தாமதமின்றி ‘மார்கெட்’ ஆர்டரை பெற்றுக்கொள்வார். இவ்வாறு நிறை வேற்றப்படும் ஆர்டர்கள் சந்தையில் வாங்க விற்கத் தயாராக இருக்கும் விலை அடிப்படையில் அந்தந்த விலையில் தயாராகக் கிடைக்கும் கொள்முதல்அளவுக்குத் தகுந்தவாறு சரியான விலை நேர முன்னுரிமையின்படி. இவ்வாறு நிறைவேற்றப்படும் ஆர்டர்களின் விலைகள் கடைசியாக நிறைவேற்றப்பட்ட விலைகளிலிருந்து அல்லது அந்த கமாடிட்டி டிரைவேடிவ்ஸ் ஒப்பந்தத்தின் மிகச் சிறந்த விலைகளிலிருந்து மிக அதிகம் வேறுபட்டிருக்கக் கூடும் என்பதை புரிந்துகொள்ள வேண்டும்.

c. “லிமிட்” ஆர்டர் ’லிமிட்’ விலையில் அல்லது அதற்கும் அதிக விலையில் மட்டுமே நிறைவேற்றப்படும். இது போன்ற ஆர்டர்களில் வாடிக்கையாளருக்கு விலை குறித்த பாதுகாப்பு கிடைக்கும் என்றாலும், அவர் ஆர்டர் நிறைவேற்றப்படாமல் போகும் அபாயங்களையும் எதிர்கொள்ள வேண்டும்.

d. ஒரு கமாடிட்டி டிரைவேடிவ்ஸ் ஒப்பந்தத்தின் தற்போதைய விலையை விட “விலகியே” ஸ்டாப் லாஸ் ஆர்டர்கள் பொதுவாக சந்தையில் செய்யப்படுகின்றன என்றாலும், சந்தையில் கமாடிட்டி டிரைவேடிவ்ஸ் ஒப்பந்தம் விலை அந்த ஸ்டாப் லாஸ் ஆர்டர் விலையைத் தொடும் போது அல்லது இந்த விலையைக் கடந்து போகும் போது இந்த ஸ்டாப் லாஸ் ஆர்டர் செயல்படும். நடப்பு விலையைக் காட்டிலும் குறைவாக ஸ்டாப் செல் ஆர்டர்களும், நடப்பு விலையைக்காட்டிலும் அதிகமாக ஸ்டாப் பை ஆர்டர்களும் பொதுவாகச் செய்யப்படும். கமாடிட்டிடிரைவேடிவ்ஸ் ஒப்பந்தம் விலை சந்தையில் அந்த முன்-முடிவு செய்யப்பட்ட விலையைத் தொடும் போது அல்லது அந்த விலையைக் கடந்து போகும் சமயங்களில் ஸ்டாப் லாஸ் ஆர்டர்கள் மார்கெட் / லிமிட் ஆர்டர்களாக மாற்றமடைந்து அந்த விலையில் அல்லது அதற்கும் மேலான சகாய விலையில் நிறைவேற்றப்படும். இவ்வாறு முன்னதாகவே முடிவு செய்யப்படும் விலையை கமாடிட்டி டிரைவேடிவ்ஸ் ஒப்பந்தம் விலை தொடும் அல்லதுகடந்து போகும் என்ற உத்தரவாதம் ஏதும் இல்லாத நிலையில் இது போன்ற ஸ்டாப்

லாஸ்ஆர்டர்கள், வழக்கமான லிமிட் ஆர்டர்களைப் போலவே, நிறைவேற்றப்படாமல் போகும் வாய்ப்புகள் எழும்.

v. **செய்தி அறிவிப்புகளின் இடர்**

a. கமாடிட்டிகளின் விலை மற்றும்/அல்லது கமாடிட்டி டிரைவேட்டிவ் ஒப்பந்தங்களின் மீது தாக்கம் ஏற்படுத்தும் செய்தி அறிவிப்புகளை வர்த்தகர்கள் / உற்பத்தியாளர்கள் வெளியிடலாம். இந்த அறிவிப்புகள் வர்த்தகத்தின் போது நடைபெறலாம் மற்றும் அது குறைந்த லிக்விடிட்டியுடன் அதிக விலை மாறளவு வீச்சுடன் சேரும் போது, அந்த கமாடிட்டிடிரைவேடிவ்ஸ் ஒப்பந்தத்தின் விலை ஏகமாக ஏற்றமடைந்தோ அல்லது இறக்கமடைந்தோ எதிர்பாராத விளைவுகளை ஏற்படுத்தக் கூடும்.

vi. **வதந்திகளின் இடர்**

a. சில நேரங்களில் சந்தைகளில் நிறுவனங்கள் / செலாவணி குறித்த வதந்திகள் பேச்சு வழக்கில், செய்தித்தாள்கள், இணையதளங்கள் அல்லது செய்தி முகமைகள் போன்றவை மூலம் பரவலாம். வதந்திகளை அடையாளம் கண்டு முதலீட்டாளர்கள் அவற்றிலிருந்து விலகியிருக்க வேண்டும்.

vii. **சிஸ்டம் இடர்:**

a. சந்தை ஆரம்பம் ஆகும் போதும், சந்தை முடிவடையும் நேரத்திலும் மிக அதிக எண்ணிக்கையில் வர்த்தகங்கள் நடைபெறுவது அடிக்கடி நிகழும் சம்பவம். ஒரு நாளில் எந்த நேரத்தில் வேண்டுமானாலும் இதுபோன்ற அதிக எண்ணிக்கை வர்த்தகங்கள் நடைபெறக் கூடும். இவற்றால் ஆர்டர்கள் நிறைவேற்றப்படுவதும் அல்லது உறுதியாக்கம் கிடைப்பதும் தாமதமாகலாம்.

b. விலை மாறளவு சமயங்களில், வர்த்தகத்தில் ஈடுபட்டிருப்பவர்கள் தொடர்ந்து விலையையும் கொள்முதல் அளவையும் மாற்றி ஆர்டர்களைப் புதுப்பித்துக் கொண்டிருப்பதால் அல்லது புது ஆர்டர்களைச் செய்து கொண்டிருப்பதால், ஆர்டர்கள் நிறைவேற்றப்படுவதும் அல்லது உறுதியாக்கம் கிடைப்பதும் தாமதமாகலாம்.

c. ஒரு சில சந்தை நிலவரத்தில், ஒரு நியாயமான விலையில் தன்னிடமிருப்பவை அனைத்தையும் காலி செய்ய வகை கிடைக்காமல் போகலாம் அல்லது வாங்குவதற்கும் விற்பதற்கும் ஆர்டர்கள் ஏதும் இல்லாத நிலை உருவாகலாம், அல்லது வழக்கமில்லா வர்த்தக செயல்பாடுகள் காரணமாக அல்லது ஏதாவது ஒரு விளைவு சார்ந்து கமாடிட்டி டிரைவேடிவ்ஸ் ஒப்பந்தத்தில் வர்த்தகம் நிறுத்தப்படலாம் அல்லது கமாடிட்டி டிரைவேடிவ் ஒப்பந்தம் சர்க்யூட் ஃபில்டர்ஸ்

நிலையை எட்டிவிடும் போது அல்லது வேறு எந்த காரணத்திற்காகவும் வர்த்தகம் நிறுத்தப்படலாம்.

viii. **சிஸ்டம்/நெட்வொர்க்ஸ் நெரிசல்:**

a. எக்ஸ்சேஞ்சுகளில் எலக்ட்ரானிக் முறையில் வர்த்தகங்கள் செய்யப்படுகின்றன, சாட்டிலைட் / லீஸ்ட் லைன் தகவல் தொடர்பு அடிப்படையில் கம்ப்யூட்டர் சிஸ்டம்கள் மற்றும் தொழில் நுட்பங்கள் மூலம் அனுப்பிப் பெறப்படும் ஆர்டர்கள் நிறைவேற்றப்படுகின்றன. ஆகையால், தகவல் தொடர்பு செயலிழப்பு அல்லது சிஸ்டம் பிரச்னைகள் அல்லது மெதுவாகச் செயல்படுதல் அல்லது தாமதித்த சிஸ்டம் எதிர்ச்செயல்கள் அல்லது வர்த்தகம் நிறுத்தப்படுதல் அல்லது இதர பிற பிரச்னைகள் / சிக்கல்கள் காரணமாக டிரேடிங் சிஸ்டம் / நெட்வொர்க்குடன் தொடர்பு கொள்ள முடியாமல் போதல் போன்றவை யாருடைய கட்டுப்பாட்டுக்கும் உட்பட்டவையாக இல்லை என்பதால் ஆர்டர்கள் பரிசீலிக்கப்படுவது தாமதப்படலாம் அல்லது வாங்க அல்லது விற்க செய்யப்பட்டிருக்கும் ஆர்டர்கள் பகுதியாகவோ அல்லது முழுமையாகவோ நிறைவேற்றப்படாமல் போய்விடலாம். இதுபோன்ற பிரச்னைகள் தற்காலிகமானவை என்று எச்சரிக்கை செய்யப்பட்ட போதிலும், உங்கள் நிலுவை நிலைமை அல்லது எதிர்பாராத ஆர்டர்கள் போன்றவை நீங்கள் நிறைவேற்றியே ஆக வேண்டிய பிணைபொறுப்புகளுக்கும் ஏற்கனவே நிறைவேற்றப்பட்ட ஆர்டர்களுக்கும் பொறுப்பேற்றவர்களாக ஆகி எதிர்பாராத நிலைமையில் தள்ளப்படும் அபாயத்தை எதிர்கொள்ள வேண்டியிருக்கும்.

**2. டிரைவேடிவ்ஸ் பிரிவுகளைப் பொறுத்த வரையில், கீழே கொடுக்கப்பட்டிருக்கும் கூடுதல் விஷயங்களை தயவுசெய்து தெளிவாகப் புரிந்து கொள்ளுங்கள்:-**

**"லிவரேஜ்"மற்றும் "கியரிங்" விளைவு:**

a. டிரைவேடிவ்ஸ் சந்தையில், டிரைவேடிவ்ஸ் ஒப்பந்த தொகையுடன் ஒப்பிடும் போது மார்ஜின் அளவுகள் மிகவும் குறைவு என்பதால் நடவடிக்கைகள் "லிவரேஜ்டு" அல்லது "கியர்டு" செய்யப்பட்டவையாகக் கருதப்படும். சிறிய மார்ஜின் அளவுகளிலேயே செய்யப்படும் டிரைவேடிவ்ஸ் வர்த்தகங்கள் மார்ஜின் தொகைகளுடன் ஒப்பிடும் போது மிகப் பெரிய இலாபம் அல்லது நஷ்டத்திற்கான வாய்ப்புகளுடன் செய்யப்படுகின்றன என்றாலும் டிரைவேடிவ்ஸ் வர்த்தகங்களில் பெரிய அபாயங்கள் பொதிந்திருப்பதை உணர்ந்தே அவை செய்யப்படுகின்றன. ஆனால், கமாடிட்டி டிரைவேட்டிவில் வர்த்தகம் செய்வதில் அதிகமான அளவிலான இடர் இருக்கிறது.ஆகவே நீங்கள் உண்மையில் கமாடிட்டி டிரைவேட்டிவ் ஒப்பந்தங்களில் வர்த்தகம் செய்வதற்கு முன்பாக கீழ்காணும் வாக்கியங்களை நீங்கள் முழுமையாக புரிந்துகொள்ள வேண்டும் மற்றும் ஒருவருடைய சூழ்நிலை, நிதிநிலை வளங்கள் உள்ளிட்டவற்றை கருத்தில்கொண்டு நீங்கள் எச்சரிக்கையுடன் வர்த்தகம் செய்ய வேண்டும்.

b. ஃபியூச்சர்ஸ் டிரேடிங்கில் உங்கள் அனைத்து நிலைகளையும் தினசரி அடிப்படையில் சரிகட்ட வேண்டியிருக்கும். ஒரு நாள் ஆரம்பத்தில் உங்கள் ஓப்பன் பொசிஷன்களை சந்தைக்கு முடிவடைந்த விலையின் அடிப்படையில் மதிப்பிடப்படும். விலை உங்களுக்கு எதிராகப் போயிருந்தால் அந்த விலை சரிவின் பொருட்டு கணக்கிடப்படும் நஷ்டத் தொகையை (பெயரளவு) டெபாசிட் செய்ய வேண்டியிருக்கும். பொதுவாக அடுத்த நாள் சந்தை ஆரம்பிக்கும் முன்னர், ஒரு குறிப்பிட்ட காலவரைக்குள் இந்த தொகையை நீங்கள் டெபாசிட் செய்ய வேண்டியிருக்கும்.

c. இந்த கூடுதல் தொகையை குறிப்பிட்ட நேரத்திற்குள் நீங்கள் கட்டத் தவறும் போது அல்லது உங்கள் கணக்கில் நிலுவைத் தொகை காட்டப்படும் போது, உறுப்பினர் உங்கள் பொசிஷனிலிருந்து ஒரு பகுதியையோ அல்லது முழு பொசிஷனையோ விற்றுவிடுவார் அல்லது வேறு பிணையத்தால் அதை நிரப்பிக் கொள்வார். இது போன்ற முடித்து /சரிகட்டும் நடவடிக்கைகளால் விளையும் நஷ்டங்களுக்கு நீங்கள் பொறுப்பேற்க வேண்டியிருக்கும்.

d. ஒரு சில சந்தை நிலவரத்தில், சில நடவடிக்கைகளைச் செய்யவோ அல்லது நிறைவேற்றவோ முடியாத நிலையை முதலீட்டாளர் சந்திக்க வேண்டியிருக்கும். உதாரணத்திற்கு, லிக்விடிட்டி, அதாவது வாங்குவதற்கும் விற்பதற்கும் போதுமான ஆர்டர்கள் சந்தையில் கிடைக்காதது அல்லது விலை வரையரை அல்லது சர்க்யூட் பிரேக்கர்ஸ் போன்றவற்றால் வர்த்தகம் இடைநிறுத்தம் செய்யப்படுவது.

e. சந்தை நிலைத்தன்மையை பராமரிக்க, கீழ்க்கண்ட நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டியிருக்கும்: மார்ஜின் வீதத்தை மாற்றிக் கொள்ளலாம், ரொக்க மார்ஜின் வீதத்தை அல்லது மற்றதை அதிகரித்துக் கொள்ளலாம். இது போன்ற புதிய நடவடிக்கைகள் நடப்பிலிருக்கும் ஓப்பன் பொசிஷன்களிலும் செய்து கொள்ளலாம். இதற்கு நீங்கள் கூடுதல் மார்ஜின்களைக் கட்ட வேண்டியிருக்கும் அல்லது உங்கள் பொசிஷன்களைக் குறைத்துக்கொள்ள வேண்டியிருக்கும்.

f. நீங்கள் வர்த்தகம் செய்ய விரும்பும் டிரைவேடிவ்ஸ் ஒப்பந்தங்களின் முழு விபரங்களையும் - ஒப்பந்த விபரங்கள் மற்றும் அவற்றைச் சார்ந்த பிணைபொறுப்புகள் போன்றவற்றை உங்கள் தரகரிடம் கேட்டுக்கொள்ளலாம்.

## 3. ஒயர்லெஸ் தொழில்நுட்பம் அல்லது வேறு தொழில்நுட்பம் மூலம் வர்த்தகத்தில் ஈடுபடுதல்:

ஒயர்லெஸ் தொழில் நுட்பம் அல்லது வேறு தொழில் நுட்பத்தின் மூலம் செய்யப்படும் பங்கு ஆவண வர்த்தகங்களைச் சார்ந்த கூடுதல் வசதிகளாகக் கிடைக்கும் வர்த்தகத்துடன் தொடர்புடைய அம்சங்கள், இடர்கள், பொறுப்புகள், கடமைகள் மற்றும் பிணை பொறுப்புகள் ஆகியவற்றை உறுப்பினர் வாடிக்கையாளர் கவனத்திற்கு எடுத்துச்செல்ல வேண்டும்.

## 4. பொதுவானவை

i. **டெபாசிட் செய்த ரொக்கம் மற்றும் சொத்து:**
நீங்கள் டெபாசிட் செய்யும் பணம் அல்லது சொத்து ஆகியவற்றின் பாதுகாப்பு குறித்து குறிப்பாக ஒரு நிறுவனம் நொடிந்துபோகும் அல்லது திவாலாகும் சூழலில் நீங்கள் பரீட்சையமாக வேண்டும். நீங்கள் எந்த அளவுக்கு உங்கள் பணம் அல்லது சொத்தை மீட்க முடியும் என்பது குறிப்பிட்ட சட்டம் அல்லது உள்ளூர் விதிமுறைகளுக்கு உட்பட்டது. சில சட்ட வரையறைகளில், உங்களுடையது என்று குறிப்பாக அடையாளம் காணப்பட்ட சொத்தானது பற்றாக்குறை ஏற்படும் சூழலில் விநியோகிக்கும் நோக்கத்திற்காக அதே முறையில் பணமாக கணக்கிடப்படும். எக்ஸ்சேஞ்சில் உள்ள ஏதேனும் ஒரு உறுப்பினருடன் தகராறு ஏற்பட்டால், அது விதிமுறைகள், துணை விதிகள், மற்றும் எக்ஸ்சேஞ்சின் தொழில் விதிமுறைகளின் படி மத்தியஸ்தம் செய்யப்படும்.

ii. **கமிஷன் மற்றும் பிற கட்டணங்கள்:**
நீங்கள் வர்த்தகத்தை தொடங்குவதற்கு முன்பாக நீங்கள் செலுத்த வேண்டிய அனைத்து கமிஷன்கள், கட்டணங்கள் மற்றும் பிற கட்டணங்கள் குறித்து நீங்கள் தெளிவான விளக்கத்தைப் பெற்றுக்கொள்ள வேண்டும். இந்த கட்டணங்கள் உங்கள் மொத்த லாபத்தை (இருந்தால்) பாதிக்கலாம் அல்லது உங்கள் நஷ்டத்தை அதிகப்படுத்தலாம்.

iii. உறுப்பினர்கள்/ அதிகாரம்பெற்ற நபர்கள்/ வாடிக்கையாளர்களின் உரிமைகள் மற்றும் பொறுப்புகளுக்கு தயவுசெய்து *பிற்சேர்கை3-ஐ* பார்க்கவும்.

iv. 'உள்ளடக்கியது' என்கிற வார்த்தை ஒரு வாடிக்கையாளர், ஒரு நுகர்வோர் அல்லது ஒரு முதலீட்டாளரை அர்த்தப்படுத்தலாம் மற்றும் உள்ளடக்கலாம், இவர் எக்ஸ்சேஞ்ச் வழங்கும் இயக்கத்தின் மூலமாக கமாடிட்டி டிரைவேட்டிவ்களில் வர்த்தகம் செய்வதற்காக உறுப்பினருடன் செயல்படுகிறார்.

v. 'உறுப்பினர்' என்கிற வார்த்தை எக்ஸ்சேஞ்சினால் நியமிக்கப்பட்டு SEBI இடம் இருந்து ஒரு பதிவு சான்றிதழைப் பெற்ற ஒரு வர்த்தகம் செய்யும் உறுப்பினர் அல்லது ஒரு உறுப்பினர்/தரகர் என்று அர்த்தப்படும் மற்றும் உள்ளடக்கும்.